*பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்*

***திருச்சி - 8.***
***15.4.1986***

அன்பிற்குரிய மௌலவீ அ.கலீல் அஹமது கீரனூரி அவர்களுக்கு, அபூ அப்தில்லாஹ் எழுதும் மடல்.

அஸ்ஸலாமு அலைக்கும்(வரஹ்)

நலம், நலம் விளைய அல்லாஹ்(ஜல்)வை இறைஞ்சு கிறேன். நீண்ட நாட்களுக்குப் பிறகே தங்களின் கடிதத்திற்குப் பதில் எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. மன்னிக்கவும்.

இதற்கு இடையில் காயல்பட்டணம் மௌலவி ஹாபிழ் எஸ்.எம். ஐதுரூஸ் எம்.எப்.பி. ஆலிம் அவர் களுக்கு எழுதிய கடித நகலும், சில சகோதரர்கள் எழுதிக் கேட்டிருந்த ஐயங்களுக்கு எழுதிய பதில்களின் நகல்களும், திண்டுக்கல், சகோதரர் சுல்தான்பாய் வாயிலாகத் தங்களுக்கு அனுப்பியது, கிடைத்துப் பார்வை யிட்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

தங்களது 10.12.1985 கடிதத்தில் காணப்படும் ஐயங் களுக்கு எனது வாழ்க்கையின் போக்கை மாற்றிய சிந்தனைகளையே பதில்களாகச் சமர்ப்பிக்கிறேன். குற்றம் இருப்பின் ஆதாரங்களுடன் விளக்கினால் நன்றியுடைய வனாக இருப்பேன்.

எம் வெளியீடுகளிலும் அந்த ஐயங்களுக்கு விடை கள் இருக்கின்றன. எதையும் ஆத்திரத்தோடு அணுகி னால் நிரபராதியும் குற்றவாளியாகி விடுகிறான். அனு தாபத்தோடு அணுகினால் குற்றவாளியும் நிரபராதியாகி விடுவான். ஆத்திரமும் இல்லாமல் அனுதாபமும் இல்லாமல் நடுநிலையோடு நமது பிரசுரங்களையும் கடிதத்தையும் பார்வையிடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

என் இலங்கைச் சர்வகலாசாலை படிப்புக் காலத் தில், 21-ஆவது வயதில் ஏற்பட்ட பெரும் மாறுதலுக்குப் பிறகு, முழுக்க முழுக்க முகல்லிதாகவும் தாங்கள் எழுதியிருந்த அதே சிந்தனைகளின் அடிப்படையில்

முன்னோர்களை, முன் சென்ற அறிஞர்களைப் பின்பற்றி நடக்கக் கூடியவனாகவும் தப்லீஃக் பணியில் தீவிரமாக ஈடுபட்டவனாகவும் இருந்தேன் என்பது தங்களுக்கும் தெரிந்த செய்தி. 1981-ல் ஹஜ்ஜுக்குச் செல்லும் போதும் முகல்லிதாகச் சென்று முகல்லிதாகவே திரும்பியது உண்மையே. அரபு நாடு என்னை மயக்கும் நிலையில், நான் இல்லை. அந்த அவசியமும் எனக்கு இல்லை. காரணம் என் கைகளிலுள்ள தொழில்களிலேயே முறை யாகக் கருத்துச் செலுத்தி, அதிலேயே குறியாக இருந்தால் இலட்சம் இலட்சமாக என்ன? கோடி கோடியாக பொருளீட் டும் ஆற்றலையும், மதிநுட்பத்தையும் அல்லாஹ்(ஜல்) எனக்குத் தந்துள்ளான். 1978-ல் பேரறிஞர் பெருமக்களு க்கு ஒரு கனிவான வேண்டுகோள் என்ற தலைப்பில் வெளியிட்ட இலவசப் பிரசுரத்தில் ‘பொருளீட்டுவதுதான் மனித இலட்சியம் பொருளீட்டுவதில்தான் மனித வெற்றி இருக்கிறது’ என்று யாரும் மெய்ப்பித்தால் அந்தப் பொருளைக் குவித்துக்காட்ட நான் தயாராக இருக்கிறேன் என்று கூறி இருப்பதைத் தங்கள் கருத்துக்குக் கொண்டு வருகிறேன்.

நீங்கள் ஆன்மீகப் பாதை என்று குறிப்பிட்டுள்ளதில் நம்பிக்கை வைத்து, என் 21-ஆம் வயதில் அனைத்தையும் துறந்து, உடுத்தி இருந்த கைலி, ஜுப்பாவோடு வீட்டை விட்டு வெளியேறி வந்தவன் நான். சில ஆண்டுகளாகத் துறவு மனப்பான்மையில் வாழ்ந்து வந்ததையும், காஜாநகர் அரபிக் கல்லூரியில் தாங்கள் பேராசிரியராகப் பணியாற்றும் போது அறிந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அந்த வாலிப வயதில் பணத்திற்காக, பதவிக்காக மயங்கும் நிலையைத் தராத அல்லாஹ்(ஜல்) இன்றும் என்னை அவற்றைவிட்டும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறான். பனீ இஸ்ராயீல் மக்களை, மீன் பிடிக்கக் கூடாத சனிக்கிழமை யன்று மிகுதியான மீன்கள் கரைக்கு வந்து துள்ளிக் குதிப்பது கொண்டு சோதித்ததுபோல், அல்லாஹ்(ஜல்) கோடி கோடியாகப் பொருளீட்டும் பல சூழலைக் காட்டி அதில் மயங்குகின்றேனா? அல்லது ‘இஸ்லாம்’ மார்க்கத்தை உள்ளது உள்ளபடி நிலைநாட்டும் இலட்சியப் பணியில் உறுதியாக இருக்கின்றேனா? என்று சோதித்து வருகிறான்?

சோதனையை விடும் அவனே அச்சோதனையில் வெற்றியை யும் தந்து கொண்டிருக்கிறான். இறுதி வரை வெற்றியைத் தந்து எனது இலட்சியப் பயணத்தில் இலக்கை அடைய, அந்த வல்லவனே பூரண உதவி செய்வான் என்று அவனிடம் மட்டும் நம்பிக்கை வைத்துச் செயல்பட்டு வருகிறேன். இந்த நிலையில் அரபுநாடு என்னை மயக்குகின்றது என்ற குற்றச்சாட்டு நியாயம்தானா? என்று சிந்தித்துப் பார்க்கும்படி அன்புடன் கேட்கின்றேன்.

நபி(ஸல்) அவர்கள் காட்டித்தராத அப்படிப்பட்ட ஒரு ஆன்மீகப் பாதை இருக்கமுடியாது என்ற விளக்கம் என் 42-ஆவது வயதிலேயே எனக்குக் கிடைத்தது. குர்ஆன் வசனங்களையும் ஹதீஸ்களையும் ஆராயும் போதே இந்தத் தெளிவு எனக்குக் கிடைத்தது. நபி(ஸல்) அவர்கள் தம் மருமகன் அலீ(ரழி) அவர்களுக்கு மறைவாகச் சொல்லிக் கொடுத்ததாகச் சொல்லப்படும் கட்டுக் கதையைத் தான் நானும் இது காலம் வரை நம்பி வந்தேன். இரகசியம் என்று வரும் உண்மை ஹதீஸ்களை ஆராய்ந்தபின் அப்படிப்பட்ட பேச்சுக்கே இடம் இல்லை. அதற்கு மாற்றான பேச்சே உண்மை யானது என்ற தெளிவு எனக்கு ஏற்பட்டது. அந்த ஹதீஸ்களையும் கீழே குறிப்பிடுகிறேன். இவை அல்லாத அந்தக் கருத்துள்ள உண்மை ஹதீஸ் இருந்தால், ஆதாரங்களுடன் அறியத் தாருங்கள்.

**1. ஒருவர் அலீ(ரழி) அவர்களிடம் வந்து நபி(ஸல்) அவர்கள் தங்களிடம் தனிப்பட்ட முறையில் குர்ஆனில் இல்லாத என்ன இரகசியம் கூறி வந்தார்கள்? என்று வினவினார். அலீ(ரழி) அவர்களுக்குச் சினம் ஏற்பட்டது. எனவே அவர்கள் "பிறருக்கு மறைத்து என்னிடம் யாதோர் இரகசியமும் அவர்கள் கூறவில்லை. ஆனால் அவர்கள் என்னிடம் நான்கு செய்திகளை அறிவித்துள்ளனர், என்று கூறினார். அவை என்ன? என்று அவர் வினவினார். அதற்கு அலீ(ரழி) அவர்கள், அல்லாஹ் அல்லாதவர்களுக் காக எவர் உயிர்ப் பிராணியை அறுக்கிறாரோ அவரை அல்லாஹ் சபிக்கிறான் என்றும், எவன் தன் பெற்றோ ரைச் சபிக்கிறானோ அவனையும், அல்லாஹ் சபிக்கிறான் என்றும், எவன் மார்க்கத்தில் புதுமையைப் புகுத்துபவருக்கு**

இடமளிக்கின்றானோ அவனையும் அல்லாஹ் சபிக்கிறான் என்றும், பூமியில் (எல்லைகளை நிர்ணயிக்கவோ வழிகாட்டவோ) உள்ள அடையாளங்களை அழிப்பவனையும், அல்லாஹ் சபிக்கிறான் என்றும் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அபுத்துஃபைல்(ரழி), நூல் : முஸ்லிம், நஸயீ*

2. நானும் உஷ்தறான் நக்யீ அவர்களும் அலீ(ரழி) அவர்களிடம் சென்று, நபி(ஸல்) அவர்கள் பொதுமக்களிடம் கூறாத எதனையும் தங்களிடம் குறிப்பாக இரகசியமாகக் கூறியுள்ளனரா? என்று வினவினோம். (அதற்கு) அவர்கள்; இல்லை இதைத்தவிர என்று கூறித் தங்களின் வாள் உறையிலிருந்து ஓர் ஓலையை எடுத்தனர். அதில் எழுதப்பட்டிருந்ததாவதுக "முஸ்லிம்களின் இரத்தங்கள் அனைத்தும் சரி சமமானவையாகும். அவர்களின் கைகளும் ஒன்றே அவர்கள் அல்லாதவர்கள் மீது (அதாவது அவர்கள் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்து கொள்வதில்) மேலும் அவர்கள் எவரேனும் செய்திருக்கும் (சிறு) உடன்படிக்கையையும் நிறைவேற்ற முயற்சி செய்வது அவர்கள் அனைவர்மீதுள்ள பொறுப்பாகும். அறிந்து கொள்ளுங்கள், எந்த விசுவாசியும் நிராகரிப்பவருக்குப் பகரமாகக் கொலை செய்யக்கூடாது. அன்றி உடன்படிக்கை செய்து கொண்ட எவரும் தம் உடன் படிக்கையை முறித்தல் கூடாது. மேலும் எவர் மார்க்கத்தில் புதுமையை ஏற்படுத்துகிறாரோ அது அவருக்கே கேடாகும். எவர் மார்க்கத்தில் புதுமையை ஏற்படுத்து கிறாரோ அல்லது அவ்விதம் ஏற்படுத்துபவருக்கு இட மளிக்கிறாரோ அவர்மீது அல்லாஹ்வுடையவும், வானவர்களுடையவும், மனிதர்களுடையவும் சாபம் உண்டாகிறது.

*அறிவிப்பவர் : கைஸ் இப்னு உபாதா(ரழி), நூல் : அபூதாவூது, நஸயீ*

3. அபூ ஹுரைரா(ரழி) அவர்கள் "நான் ஒரு பகுதியைத் தான் உங்களிடம் கூறி இருக்கிறேன். இன்னொரு பகுதியைக் கூறினால் என் குரல்வளை துண்டிக்கப்படும்" என்று கூறியதையும் இவர்கள் ஆதாரம் காட்டுகின்றனர். இதன் அறிவிப்பாளர் "அபூஹுரைரா(ரழி) அன்றைய அரசியல் நிலைமையையே குறிப்பிட்டார்கள்"

என்று குறிப்பிடுகின்றனர். அந்த விளக்கத்தை ஏற்க முடியாது என்று ஒரு வாதத்துக்கு ஒப்புக்கொண்டாலும் இன்னொரு வினா இங்கே எழுகின்றது. அபூஹுரைரா (ரழி) அவர்கள் எவரிடமும் அந்த இரகசியத்தைக் கூறாமல் மறைத்து விட்டனரே, மற்றவர்களுக்கு எப்படி அந்த இரகசியம் தெரிந்தது?

4. ஹுதைபா(ரழி) அவர்கள் சாஹிபல்ஸிர் என்று அழைக்கப்பட்டனர். அவர்களிடம் உமர்(ரழி) அவர்கள் முனாபிகீன்களைப் பற்றிக் கேட்டனர். ஹுதைபா(ரழி) சொல்ல மறுத்து விட்டனர். உமர்(ரழி) அவர்களில் தான் இருக்கின்றானா என்று கேட்டனர். இல்லை என்ற பதில் கிடைத்தது. உமர்(ரழி) அவர்களிடமே சொல்லாத இரகசியத்தை வேறு யாரிடமும் ஹுதைபா(ரழி) அவர்கள் சொல்லி யிருப்பார்களா?

ஆக இரகசியம் என்ற அடிப்படையில் வரும் ஹதீஸ்கள் பித்அத்துக்களைக் கண்டிக்கின்றனவே அல்லாமல், இவர்கள் சொல்வதுபோல் பித்அத்துக்கு ஆதரவாக இல்லை. மேலும் தனது தோழர்கள் அனைவரையும் விட்டுவிட்டுத் தன் மருமகன் அலீ(ரழி) அவர்களிடம் மட்டும் அல்லாஹ்வை நெருங்கும் அரிய இரகசியத்தை நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று கூறுவது. நபி(ஸல்) அவர்கள் மிகவும் சுயநலத் தோடு நடந்திருக்கிறார்கள் என்றும் இன்றியமையாத ஒரு செய்தியை முஸ்லிம்களிடமிருந்து மறைத்துவிட்டார்கள் என்றும், நபி(ஸல்) அவர்கள்மீது மாபெரும் அவதூறு களைச் சொல்வதேயாகும். மற்றவர்களுக்கு அதைத்தாங் கும் சக்தி இல்லை அதனால் சொல்லவில்லை என்று சொல்வார்களானால், இது முன்னையதைவிட மடமை யாகும். அபூபக்கர்(ரழி), உமர்(ரழி), உதுமான்(ரழி) ஆகிய வர்களை எல்லாம் இழிவுபடுத்தும் ஷீஆக்களின் இழி செயலுக்குத் துணை போவதாகும். முக்கியமான ஒரு விஷயம் குர்ஆன், ஹதீஸில் இல்லாத ஒரு விஷயம் மார்க்கத்தில் ஒரு முக்கிய இடத்தை வகிக்க முடியும் என்று நம்புவது ஈமானை இழப்பதாகும். ஆகவே தன்னலம் நாடுவோரால், மார்க்கத்தை வைத்து வயிறு வளர்ப்பவர் களால், இட்டுக் கட்டப்பட்டக் கட்டுக்கதையே அல்லாமல், உண்மை இல்லை என்ற முடிவுக்கு வந்து, அதை

ஒதுக்குவதைத் தவிர ஒரு முஸ்லிமுக்கு வேறு வழி இல்லை.

அல்லாஹ் குர்ஆனில் குறிப்பிடுகின்ற, நபி(ஸல்) அவர்கள் தெளிவாக வெளிப்படையாகச் சொன்ன 'சிராத்தல் முஸ்தகீம்' என்ற ஒரே பாதையைத் தவிர வேறு ஒரு பாதை இஸ்லாத்தில் இல்லை என்பதே தெளிவான உண்மையாகும். இதற்கு மேலும் இந்த விஷயத்தில் நம்பிக்கை வைப்பது நேர்வழி நடக்கும் ஒரு முஸ்லிமின் செயலாக இருக்கவே முடியாது. இந்தச் சிந்தனைக்குப் பிறகே குர்ஆன், ஹதீஸில் தெளிவாகக் கூறப்படாத ஆன்மீகப்பாதை என்று ஒன்று இருக்கிறது என்ற குருட்டு நம்பிக்கையை விட்டுத் தௌபாச் செய்து நான் வெளியேறினேன். இதில் நீங்கள் குறை கண்டால், தக்க குர்ஆன், ஹதீஸ்களுடன் விளக்கித் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

முகல்லிதுகள் இருப்பதுபோல் கைர முகல்லிது களும் தொன்று தொட்டே இருந்து வருகிறார்கள். நான்கு மத்ஹபுகளுடன் ஐந்தாவது மத்ஹபாகச் செயல்பட்டு வருகிறார்கள். இது ஒன்றும் புதிய ஆராய்ச்சியோ, கண்டுபிடிப்போ இல்லை என்று எழுதி இருந்தீர்கள். இது முழுக்க முழுக்க உண்மை. எனது 42ஆவது வயது வரை, (1984 வரை) நான் முகல்லிதாக இருந்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும். அவர்களும் ஒரு மத்ஹபின் அடிப்படையில் செயல்படுவதால், புதிய மத்ஹபை விடப் பழைய மத்ஹபே சிறந்தது என்று 'ஷாஃபிஈ' மத்ஹபில் இருந்து வந்தேன் நான்.

குர்ஆன் வசனங்களையும், ஹதீஸ்களையும் ஆராய்ந்து பார்க்கும் போது மார்க்கத்தில் பிரிவுகளை உண்டாக்கியவர்கள் அனைவரும் குர்ஆன், ஹதீஸுக்கு முரண்படுகிறார்கள் என்பது தெளிவாயிற்று. பிரிவினை வாதிகள் சொல்லாத ஒரே நேர்வழியைக் குர்ஆனும், ஹதீஸ்களும் தெளிவாகச் சொல்லுகின்றன. அதுதான் '**முஸ்லிம்**' என்று சொல்லிக்கொண்டு இஸ்லாத்தைச் சார்ந்தவன் என்று மட்டும் செயல்படுவதாகும். மேலதிக மாகத் தலை, வால் எதுவும் இல்லை. இந்தத் தெளி வுக்குப்பின்தான், என்னை முஸ்லிம் என்று மட்டும் சொல்லிக் கொண்டு, அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்ட

‘**இஸ்லாத்தை**’, அது நபி(ஸல்) அவர்களின் சொல்லாலும், செயலாலும், அங்கீகாரத்தாலும் எவ்வாறு போதிக்கப்பட் டதோ அதை அப்படியே பின்பற்றவும் மக்களுக்குப் போதிக்கவும் துணிந்தேன் வழி கெட்ட கூட்டங்களைத் தெளிவாக விவரிக்கும் ஹதீஸில் வந்துள்ள, “**மாஅன அலைஹி வஅஸ்ஹாபீ**” என்ற அரபிப் பதத்தின் தெளிவான விளக்கப்படி, நபி(ஸல்) தம்மை முஸ்லிம் என்று மட்டுமே சொல்லிக் கொண்டார்கள். இன்று நம்மவர்கள் சொல்லும் எந்தப் பெயரைக் கொண்டும் தங்களை அழைத்துக் கொள்ளவில்லை. அதேபோல் நபித்தோழர்களும் தங்களை முஸ்லிம் என்று மட்டுமே சொன்னார்கள். வேறு தலை, வால் எதுவும் சேர்க்கவில்லை. அடையாளம் தெரிந்து கொள்வதற்காக முஹாஜிரீன்கள், அன்சாரிகள், பத்ரீன்கள் என்று அழைக்கப்பட்டார்களே யல்லாமல், கொள்கை அடிப்படையில் ‘**இஸ்லாம்**’, ‘**முஸ்லிம்**’ என்பது தவிர்த்து, வேறு பெயர்களைச் சூட்டிக் கொண்டார் கள் என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. இன்று நம்மவர்கள் சூட்டிக் கொள்ளும் பெயர்கள் அனைத்தும் இவர்களின் யூகங்களே அல்லாமல் குர்ஆன், ஹதீஸைக் கொண்டு மெய்ப்பிக்கப்பட்டவை அல்ல. மனித யூகங்கள் மார்க் கமாக முடியாது. அல்லாஹ்வால் அளிக்கப்பட் டவை, அங்கீ கரிக்கப்பட்டவை மட்டுமே மார்க்கம். இந்த விளக்கத்திற்குப் பிறகு ‘**மா அன அலைஹி வஅஸ்ஹாபீ**’ என்றபடி, முஸ்லிம், இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றுப வன் என்று மட்டுமே சொல்லிக்கொண்டு நபி(ஸல்) அவர்கள் சொல், செயல் அங்கீகாரம் இவற்றை மட்டும் மார்க்கமாக ஏற்றுச் செயல்படத் துணிந்தேன். இது தெளி வான சரியான, நேரான பாதை என்று உறுதி கொண் டேன். இப்போது சொல்லுங்கள் என் முடிவுகள் சரியா? தவறா? ஆதாரங்களுடன் அறியத் தாருங்கள்.

நீங்கள் கடிதத்தில் குறிப்பிட்டு எழுதி இருந்தது போல் நானும் என் 42ஆவது வயது வரை இத்திபா, இதாஅத், இக்திதா, தக்லீத் இவை அனைத்தும் ஒரே பொருளையே தருகின்றன என்று எண்ணி வந்தேன். ஆனால் ஆராய்ந்து பார்க்கும்போது இந்தத் ‘**தக்லீதை**’ எந்த வகையிலும் இத்திபா, இதாஅத், இக்திதா இவற்றோடு சேர்க்கவே முடியாது. மாறாக மலைக்கும்

மடுவுக்கும் உள்ள வேறுபாடு இருக்கிறது என்பது தெளிவாயிற்று. 'தக்லீத்', ஆதாரம் தேடாமல் கண்ணை மூடிக் கொண்டு, குருட்டுத் தனமாகப் பின்பற்றல் ஆகும். மற்ற மூன்றும் ஆதாரம் கண்டு விளங்கிப் பின்பற்றல் ஆகும். குர்ஆன் முழுவதும் தேடினாலும், பல இடங்களில், பின்பற்றுதலைப் பற்றி வந்தாலும், ஒரு இடத்திலே ஆயினும் இந்த தக்லீத் பதம் பயன்படுத்தப்படவில்லை. அதே போல் ஹதீஸிலும் பின்பற்றுதலுக்கு தக்லீத் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் குர்ஆனிலும், ஹதீஸிலிரும் 'தக்லீத்' பதம் பயன் படுத்தப்பட்டுள்ளது. எதற்காகத் தெரியுமா? குர்பானிக்காக அடையாளமிடப்பட்ட விலங்குகளை, இந்த தக்லீத் பதத்தில் குர்ஆனிலும், ஹதீஸிலும் குறிப்பிடப் படுகின்றது. விலங்குகளுக்காகக் குர்ஆனிலும், ஹதீஸிலும் பயன்படுத்தப்பட்ட '**தக்லீதை**' மனித அளவில் கொண்டுவந்து சேர்த்து, மனிதனையும் மிருகமாக்கிய புண்ணியவான் அல்லது புண்ணியவான்கள் யாரோ? தெரியவில்லை. இந்த நிலையில் நாமும் கண்ணை மூடிக்கொண்டு முஸ்லிம்களை விலங்குகளாக்குவது நியாந் தானா? நீங்களே சொல்லுங்கள்.

நீங்கள் எழுதி இருந்ததுபோல் இமாம்களான அபூஹனிஃபா(ரஹ்) ஷாஃபிஈ(ரஹ்) மாலிகி(ரஹ்) ஹன்பல் (ரஹ்) ஆகியோரும் உறுதியாகத் தக்லீத் செய்யவுமில்லை, முஸ்லிம்களைத் தக்லீது செய்யும்படி சொல்லவுமில்லை. மாறாக தக்லீத் செய்வதை நால்வரும் ஏகோபித்து மறுத்திருக்கிறார்கள் என்பதைப் பல நூல்களில் காண முடிகிறது என்ற உண்மையை ஊன்றிக் கவனிக்க வேண்டுகிறோம்.

இன்னொரு முக்கியமான செய்தி, இந்த இடத்தில் என் சிந்தனைக்கு வந்தது. அல்லாஹ்வால் ஆணையிடப்பட்டுள்ளபடி நபி(ஸல்) அவர்களைப் பின்பற்றும் அகீதா கொள்ளாமல், அல்லது நபி(ஸல்) அவர்களின் தோழர்களில் யாரையும் பின்பற்றும் அகீதா கொள்ளாமல் அவர்களுக்கும் சுமார் 150 ஆண்டுகள் கழித்து வாழ்ந்த இந்த நால்வரை மட்டும் (லிமிட்டெட் கம்பெனி) பின்பற்றும் அகீதா எப்படி ஏற்பட்டது என்ற சிந்தனையே அது. குர்ஆனுக்கும், ஹதீஸுக்கும் விளக்கம் கொடுக்கும் அதிகாரத்தை அல்லாஹு(ஜல்) இந்த நால்வருக்கும் மட்டும் தான் கொடுத்தானா? என்று ஆழ்ந்து சிந்திக்கும்

போது ஒரு உண்மை தெளிவாயிற்று. இந்த நால்வரை மட்டுமே பின்பற்றும் ‘தக்லீத்’ தத்துவம் குர்ஆனுக்கோ, ஹதீஸுக்கோ உடன்பாடான தத்துவம் அன்று. மாறாக மார்க்கத்தில் உள்ளதை மறைப்பதற்கும், மார்க்கம் அல்லாததை மார்க்கம் என்று சொல்வதற்கும், முஸ்லிம் களை அறிவுசூன்யர்களாக்கி, அதன் வழி ஒரு சாரார் வயிறு வளர்ப்பதற்கும் திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒரு சதியே, இந்த தக்லீத் தத்துவம் என்பது தெளி வாயிற்று. கிறிஸ்தவர்களின் திரியேகத்துவத் தத்துவத் திற்கும், முஸ்லிம்களின் தக்லீத் தத்துவத்திற்கும் வேறுபாடு இல்லை. இரண்டும் ஒன்றே இரண்டின் நோக்கமும் ஒன்றே என்று உண்மை புலனாயிற்று. அல்லாஹ்வின் பெயராலோ, நபி(ஸல்) அவர்களின் பெயராலோ, நபிதோழர் களின் பெயராலோ மார்க்கம் அல்லாததை சொல்லித் தப்பிக்க முடியாது. (கிறிஸ்தவர்கள் ஈசா(அலை) அவர்களின் பெயரால் சொல்லித் தப்பிக் கொள்வதுபோல், காரணம் அவர்களிடம் பதிவு செய்யப்பட்ட உண்மை நெறிநூல் இல்லை) பொய் சொல்ல ஒரே சரியான வழி, ஆதாரப்பூர்வமான சரித்திரச் சான்றுகள் இல்லாத சுமார் 150 ஆண்டுகள் கழித்துத் தோன்றி மறைந்த அந்த நான்கு இமாம்களைப் பிடித்துத் தொங்குவதே என்று இவர்கள் முடிவு செய்தே இந்தத் தக்லீத் தத்துவத்தை உண்டாக்கி யுள்ளார்கள் என்பது தெளிவாயிற்று.

அடுத்து எனக்கு ஒரு பெரிய ஐயம் ஏற்பட்டது. நாம் காணும் பல பெரியார்கள், தக்குவாதாரிகள் முகல்லிது களாகத் தானே இருந்திருக்கிறார்கள். இவர்கள் ஏன் தவறு செய்ய வேண்டும் என்பது. இதற்கு எனக்குக் கிடைத்த விடை, தக்லீத் தத்துவத்தை உண்டாக்கி யவர்கள் வேண்டுமென்றே சதித் திட்டத்தோடு உண்டாக்கி யிருக்கிறார்கள். ஆனால் தக்லீத் தத்துவத்தை எடுத்து நடக்கும் மக்களில் சில நல்ல மக்களும் இருக்கிறார்கள். ஆயினும் அவர்கள் குர்ஆன், ஹதீஸோடு ஒப்பிட்டுப் பார்க்காமல், குருட்டுத்தனமாக மூதாதையர்களைக் குறிப் பாக, அவர்கள் நம்பிக்கை வைத்துள்ள உஸ்தாதுகள், செய்குகள், பீர்கள் இப்படிப்பட்டவர்களைப் பின்பற்றுகிறார் கள். இதனால் அவர்கள் வெற்றி அடைய முடியும் என்றால், உலகிலுள்ள எல்லா சமயவாதிகளும் வெற்றி

அடைய வேண்டும். ஏனென்றால் இவர்களைப் போல் அவர்களும் அவர்கள் மூதாதையரில் பாதிரிகளில், துறவிகளில் நம்பிக்கை வைத்தே செயல்படுகிறார்கள். அவர்களிலும் பல நல்ல மக்களைப் பார்க்க முடிகின்றது. அவர்கள் செய்வது தவறு என்று எந்தக் குர்ஆனை வைத்து முடிவு செய்கிறோமோ அதே குர்ஆனை வைத்து நம்மவர்களின் செயலையும் உரசிப்பார்த்தால், இவர்களும் தவறிலேயே இருக்கிறார்கள் என்ற முடிவைத் தவிர வேறு முடிவுக்கு நம்மால் வர முடியவில்லை. ஆக 'தக்லீத்' தத்துவத்தை நேர்வழி நடந்த எந்த முஸ்லிமும் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த நான்கு இமாம்களும் ஏற்றுக் கொள்ளமுடியாது. ஆனால் அவர்கள் அனைவரும் இத்திபா, இதாஅத், இக்திதா செய்தார்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது. தெரியாத ஒன்றை தெரிந்த வரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது தக்லீதாகாது. இதை எல்லாம் இஸ்லாம் மறுக்கவில்லை. ஆதரிக்கின்றது. நீங்கள் குறிப்பிட்டிருந்த '**பஸ்அலூ அஹ்லத்திக்ரி**' என்ற வசனம் இதையே குறிக்கின்றது. இந்த வசனத்தில் '**கல்லிதூ அஹ்லத்திக்ரி**' என்றில்லை என்ற பாகத்தை நான் ஊன்றிக் கவனித்தேன். '**கல்லிதூ அஹ்லத்திக்ரி**' என்றிருக்குமானால் தாராளமாகத் 'தக்லீத்' செய்யலாம்.

கணக்குப் போடத் தெரியாத மாணவன் ஆசிரியரி டம் கணக்குப் போடும் முறையைக் கற்றுக்கொள்வது 'பஸ்அலூ' ஆகும். ஆனால் கணக்குப் போடும் முறையைக் கற்றுக் கொள்ளாமல் இறுதியில் வரும் விடையை மட்டும் தெரிந்து கொள்வது தக்லீதாகும். நன்றாகப் படித்து விளங்கி தேர்வு எழுதுவது 'பஸ்அலூ வாகும்' பக்கத்திலிருப்பவனைப் பார்த்து எழுதுவது. எழுத்துக்கு எழுத்துப் பார்த்து எழுதுவது, தக்லீதாகும். இந்தத் தெளிவு ஏற்பட்ட பின்பே, தக்லீதை முழுமையாக எதிர்க்கத் துணிந்தேன். நீங்கள் குறிப்பிட்டிருந்த அடுத்த இரண்டு குர்ஆன் வசனங்களும் விளங்கிப் பின்பற்றும் இத்திபாவே அல்லாமல், குருட்டுத்தனமாகப் பின்பற்றும் தக்லீதைக் குறிப்பன வன்று என்பதை விளங்கிக் கொண்டேன். குர்ஆனிலோ, ஹதீஸிலோ வரும் விளங்கிப் பின்பற்றுதலுக்குரிய வசனங்களைத் தக்லீதுக்கு ஆதார மாக எடுத்துக்காட்டுவது அறியாமையே, தக்லீதின் சரியான பொருளை விளங்காமையே என்ற தெளிவு

எனக்கு ஏற்பட்ட பின்பே மக்களுக்கு அதைச் சொல்லத் துணிந்தேன். இதில் தவறுண்டா? விளக்கம் தாருங்கள்.

மேலும் ஒருவரைப் பின்பற்றுவதாக அகீதா கொள்வது சாதாரண ஒரு செய்தி அன்று. மார்க்கத்தின் ஒரு தெளிவான கண்டிப்பான அம்சம். அதன் காரண மாகத்தான் நாம் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்வை கலிமாவோடு இணைத்து மொழியக் கட்டளையிடப்பட் டுள்ளோம். அதாவது பின்பற்றுதலுக்குரிய ஆணை அல்லாஹ்விடமிருந்து வந்திருக்க வேண்டும். அல்லாஹ் வின் உத்திரவவுப்படியே நபி(ஸல்) அவர்களைப் பின்பற்று வதாக அகீதா கொண்டிருக்கிறோம். அல்லாஹ் உத்திர விடாத ஒருவரை நாம் பின்பற்றுவதாக அகீதா கொண்டால், அல்லாஹ் கடமையாக்காத ஒன்றைக் கடமையாக்கும் இன்னொரு ரப்பு இருப்பதாகவே நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். (பார்க்க 42ச21) இது தெளிவான ''ஷிர்க்'' என்பதே என் சிந்தனையைத் தூண்டிற்று. நான் தக்லீதை எதிர்ப்பது நியாயமா? இல்லையா?

''சூழ்நிலைகள் காரணமாக மனங்கள் கெட்டுத் தன் உள் மனக்கெடுதியைத் தான் உணர இயலாத இக்காலத்தில் நாம் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதிலேயே நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளமுடியும்'' என்று குறிப்பிடிருந்தீர்கள். மணியான வாசகம். ஐயம் இல்லை. ஆனால் குர்ஆன், ஹதீஸுக்குள் இருப்பது நம்மை நாம் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வதா? மனித அபிப்பிராயங்களை மார்க்கமாக ஏற்று நடப்பது கட்டுப்பாட் டிற்குள் வைத்துக் கொள்வதா? என்ற சிந்தனை எனக்குத் தெளிவைத் தந்தது மனித அபிப்பிரயப்படி நம்மை நாம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதால், அது அல்லாஹ் விடம் ஒப்புக்கொள்ளப்படுவதாக இருந்தால், மாற்று மதத்தாரும் அந்த வகையில் வெற்றி பெற்றே ஆக வேண்டும். நம்மை விட அவர்களிடம் உயர்ந்த கட் டுப்பாடுகளைப் பார்க்க முடிகின்றது. அவர்கள் நஷ்ட மடைந்தவர்கள் என்று எந்த குர்ஆனை வைத்துச் சொல் கிறோமோ அதே குர்ஆனை வைத்து நம்மவர்களது கட் டுப்பாடுகளைப் பார்க்கும்போது, அவை குர்ஆனுக்கு

முரண்படும் போது அவற்றை எப்படிச் சரி காண முடியும்? ஆக மனித யூகங்களால் ஏற்பட்டுள்ள கட்டுப்பாடுகள், உண்மையான கட்டுப்பாடுகள் அல்ல. குர்ஆனாலும், ஹதீஸாலும் தெளிவாக வெளிப்படையாக அறிவிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மட்டுமே உண்மையான கட்டுப்பாடுகள், அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்படுபவை என்ற முடிவைத் தவிர வேறு முடிவுக்கு என்னால் வர முடியவில்லை. தவறிருந்தால் விளக்கம் தருக.

"இமாம்களுக்குப் பின்னர் இக்காலம் வரை இருந்து வந்துள்ள ஏராளமான நாதாக்கள், பெரியார்கள், மேதைகள், அவ்லியாக்கள், முத்தகீன்கள், சூஃபியாக்கள், இமாம் கஸ்ஸாலி முதற்கொண்டு ஆயிரம் ஆயிரம் பேர்கள் முகல்லிதுகளாக இருப்பதிலேயே தங்களுக்குப் பாதுகாப்பு என்று எண்ணி இருந்து வந்துள்ளார்கள்' என்ற பாகத்தை ஊன்றிக் கவனியுங்கள் என்று குறிப்பிட்டிருந்தீர்கள்.

எனது 42ஆவது வயது வரை முகல்லிதாக நான் இருந்து வந்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும். நீண்டகாலச் சிந்தனைக்குப் பின் இதிலும் அல்லாஹ்(ஜல்) எனக்குத் தெளிவைக் கொடுத்தான்.

மூதாதையரின், முன்சென்ற அறிஞர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்க குர்ஆன் ஆதாரம் இருக்கிறதா? என்று தேடினேன். மூதாதையரின் முன்சென்ற அறிஞர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றக் கூடாது என்பதற்கே பல இறை வசனங்கள் கிடைத்தன. முன்சென்ற அறிஞர்களைப் பின்பற்றி நடப்பதை ஆதரித்து ஒருவசனத்தையேனும் பார்க்க முடியவில்லை. அப்படி ஒரே ஒரு வசனம் இருந்தாலும் எடுத்துக்காட்டுங்கள். ஆனால் அதற்கு மாறாக 33:66,67,68 வசனங்கள் குறிப்பாகவும், தெளிவாகவும் செய்யிதுகளையும், அகாபிரீன்களையும் பின்பற்றி நடப்பதால் நரக நெருப்பில் போட்டுப் பொசுக்கப்படுவதைத் தத்ரூபமாக எடுத்துரைக்கின்றன. முன்சென்ற அறிஞர்கள் தப்பாகவா நடந்திருப்பார்கள் என்ற தப்பான எண்ணத்தோடு தப்பாகவே நடப்பதால் கோடான கோடி மக்களை ஷைத்தான் நரகில் கொண்டு சேர்க்கிறான். இது ஷைத்தானின் கருவிகளில்

மிகவும் கொடுமையான ஒரு கருவி. முன்சென்ற அறிஞர்கள் எல்லாம் வழிகேடர்களா? என்ற தப்பான எண்ணத்தை ஷைத்தானே போடுகிறான். முன் சென்றவர்கள் நல்லவர்களா? கெட்டவர்களா? என்ற சிந்தனையே நமக்குத் தேவையில்லாத ஒன்று.

**"மூஸா(அலை) அவர்களை நோக்கி, முன்னர் சென்ற மக்களின் நிலை என்ன? என்று பிர்அவ்ன் கேட்டான். அதற்கு மூஸா(அலை) அவர்கள் அவர்களைப் பற்றிய அறிவு என் இறைவனிடமே உள்ளது"** என்று கூறினார்கள். *அல்குர்ஆன் 20:51,52*

இந்த வசனங்களிலிருந்து முன்னோர்களைப்பற்றி முடிவு செய்வது நபியின் அதிகாரத்திலேயே இல்லை என்றால் நாம் எப்படி முடிவுக்கு வர முடியும்? **"அவர்கள் செய்த நல்வினை அவர்களுக்கே. நீங்கள் செய்த நல்வினைதான் உங்களுக்கு. அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்று நீங்கள் கேட்கப்படமாட்டீர்கள்"** என்று **2:134,141** ஆகிய இரண்டு இடங்களில் அல்லாஹ் தெளிவாகக் கூறுகின்றான். ஆதம்(அலை) அவர்கள் எப்படித் தவறு செய்து உலகிற்கு வந்தார்கள். யூனூஸ் (அலை) தவறிழைத்து மீன் வயிற்றுள் சிறை வைக்கப்பட வில்லையா? ஒவ்வொரு நபியும் நேர்வழியைத் தானே போதித்தார்கள். அவர்களைத் தொடர்ந்த அறிஞர்கள் எப்படி வழி தவறினார்கள்? இப்ராஹீம்(அலை) தமது பால்ய வயதிலேயே சிலை வணக்கத்தை மறுத்து, அதன் காரணமாகப் பெற்ற தகப்பனையே பகைத்து, கடுமையாகப் போராடி வீட்டை விட்டுத் துரத்தப்பட்டுப் பல இன்னல்களுக்கு ஆளாகிச் சிலை வணக்கமற்ற ஓரிறைக் கொள்கையை நிலைநாட்டி, அந்த நோக்கத்திற்காக மட்டுமே கஃபாவை புதுப்பித்தார்கள். தன் சந்ததிகளை தௌஹீதில் நிலைத்திருக்குமாறு வலியுறுத்திப் போதித்துச் சென்றிருக்க, இப்ராஹீம்(அலை) அவர்களைத் தொடர்ந்து வந்த அறிஞர்கள் எப்படி **360** சிலைகளைக் கஃபாவில் கொண்டு வந்து சேர்த்தார்கள்? இப்ராஹீம் (அலை) அவர்களின் கொள்கைக்கும், போதனைக்கும் நேர் முரணான பல கடவுள் சிலை வணக்கத்தை இப்ராஹீம்

(அலை) அவர்களின் பேராலேயே எப்படிக் கஃபாவினுள் நுழைத்தார்கள்? முன்னோர்களை முன் சென்ற அறிஞர் களைக் கண்மூடிப் பின்பற்றுவது வழி கேட்டிற்கே இட்டுச் செல்லும் என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையா?

நபி(ஸல்) அவர்களின் சிறிய தந்தை அபூலஹப், அல்லாஹ்வால் சபிக்கப்பட்டதற்கு மூலகாரணமே அவனுக்கு முன்சென்ற அறிஞர்களின்மீது அவனுக்கிருந்த குருட்டு நம்பிக்கையால், நபி(ஸல்) அவர்கள் போதித்த தௌஹீதை (ஓரிறைக் கொள்கை) எதிர்த்ததேயாகும். அபூலஹபுவுக்கு நபி(ஸல்) அவர்கள்மீது சொந்தக் குரோதமோ, குடும்பப் பகையோ இருக்கவில்லை. அல்லது தலைமைத்தனத்தில் உள்ள பேராசையின் காரணமாக நபி(ஸல்) அவர்களை எதிர்க்கவில்லை. மாறாக, நபி(ஸல்) அவர்களின்மீது உயிரையே வைத்திருந்தான். தன் இரண்டு ஆண் மக்களை நபி(ஸல்) அவர்களின் இரண்டு பெண் மக்களுக்குத் திருமணம் செய்து கொடுத்திருந் தான். அப்படியானால் குடும்பத்தின் நெருக்கத்தை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. உயிருக்கு உயிராக நேசித்த நபி(ஸல்) அவர்கள்மீது அவனுக்குக் கடும் பகைவரக் காரணம் ஒரே ஒரு காரணம் தான். தான் பார்க்கப் பிறந்தவர் முன் சென்ற அறிஞர்களை எல்லாம் அவமதிக்கிறாரே அவர்கள் செய்து வந்ததைத் தவறு என்று சொல்கிறாரே என்பதுதான். ஏன்? இன்றும் பல மதங்களில் குருட்டுத்தனமாக நம்பிக்கைவைத்து அவற் றைக் கடை பிடித்து வரும் பல ஆற்றல் மிக்க அறிவாளி களை, நாம் பார்க்கவில்லையா? பல துறைகளில் மிகத் தேர்ந்த அறிவுமிக்கவர்கள், பல தவறான மதக்கிரியை களைச் செய்து வருவதை நாம் பார்க்கிறோமே. அவர்கள் அப்படித் தவறான மதங்களில் நிலைத்திருப்பதற்குக் காரணம் இதே தவறான எண்ணம்தானேக எப்படி நாம் முன் சென்ற அறிஞர்களிடம் நம்பிக்கை வைத்திருக்கி றோமோ அதேபோல் அவர்களும் முன் சென்ற அறிஞர் களிடம் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். எப்படி நாம் பழகும் நம் அறிஞர்களின் இறைபக்தி, ஒழுக்கம், நல்ல சிந்தனை, மக்களுக்குச் சேவை செய்யும் மனப்பான்மை இவற்றை வைத்து அவர்கள் நேரான வழியில்தான் இருக்கிறார்கள் என்று நம்புகிறோமோ அதேபோல்

அவர்களும் அவர்கள் பழகும் அவர்களின் அறிஞர்களின் இறைபக்தி, ஒழுக்கம், நல்ல சிந்தனை, மக்களுக்குச் சேவை செய்யும் மனப்பான்மை இவற்றை வைத்து அவர்கள் நேரான வழியில்தான் இருக்கிறார்கள் என்று நம்பிக்கை வைத்து அவர்களைப் பின்பற்றுகிறார்கள். நாம் செய்வது சரி என்றால் அவர்கள் செய்வதும் சரியாகத்தான் இருக்க வேண்டும். இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் நம்மவர்களைவிடக் கிறிஸ்தவப் பாதிரிகளிடம் பல சிறப்புக் கூறுகள்து காணப்படுகின்றன. கல்விச் சேவை, சுகாதாரச் சேவை இப்படிப் பல சேவை களில் நம்மைவிட அவர்கள் சிறப்புற்று விளங்குகிறார்கள். என் சொந்த அனுபவத்திலேயே, இலங்கையில் படித்துக் கொண்டிருக்கும் போது ஒரு கிறிஸ்தவப் பாதிரியிடம் இருந்த உயர்ந்த ஒழுக்கம், சமூக சேவை, தன்னலம் கருதாத உழைப்ப, மக்கள் மீதுள்ள இரக்க மனப்பான்மை, பணிவு இந்த உயர்ந்த குணங்களை இதுவரை வேறுயாரி டமும் நான் பார்க்கவில்லை. ஆகவே அவர்களது திரியே கத்துவம் சரியானது என்று நாம் ஒப்புக்கொள்ள முடியுமா? அறிஞர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவது தான் மார்க்கம் என்றால் அது உண்மையானால், மக்கள் வழிகேட்டில் சென்றிருக்கவே மாட்டார்களே? நபி ஆதம் (அலை) அவர்களை அப்படியே பின்பற்றி நடந்திருந்தால் எப்படி வழிகேடு உலகில் ஏற்பட்டிருக்க முடியும்? உண்மை இதுதான். ஹுஹு **ஆதம்(அலை) தவறு செய்தார்கள். ஆதமின் மக்களும் தவறு செய்பவர்களே. தவற்றை விளங்கித் திருந்துபவர்களே சிறந்தவர்கள்.**துது இறுதி நபி முஹம்மது (ஸல்) அவர்களின் சில செயல்களைக் கண்டித்து குர்ஆன் வசனங்களைப் பார்க்கிறோம். உலகம் அழியும் வரை அமலில் இருக்கும் இறுதி வேதமாகிய நெறிநூலில் நபி(ஸல்) அவர்களைக் கண்டித்து ஒரு வசனமும் இடம் பெறாமல், அல்லாஹ்(ஜல்) காத்திருக்க முடியாதா? ஏன் அவ்வாறு செய்யவில்லை? தவறு செய்யாத தனித் தன்மை தனக்கு மட்டுமே சொந்தம். அதில் யாரும் உரிமை கொண்டாட முடியாது என்ற மாபெரும் உண் மையை மக்களுக்கு உணர்த்தவே நபி(ஸல்) அவர்களைக் கண்டித்துச் சில இறைவசனங்கள் காணப்படுகின்றன. நபி(ஸல்) அவர்கள் மரணித்து

உடலில் சூடு தணிய வில்லை. நபி(ஸல்) அவர்கள் இறந்து விட்டார்கள் என்று சொல்பவர்களின் தலையைச் சீவிவிடுவேன் என்று உமர்(ரழி) அவர்களைச் சொல்ல வைத்து, ஓர் உண்மையை அல்லாஹ் உலகிற்கு உணர்த்துகிறான். உமர்(ரழி) அவர்களின் சிறப்பைப் பற்றி அனைவரும் அறிவர். பல இறைவசனங்கள் அவர்கள் விருப்பப்படியே இறங்கின. உமரின் நாவில் அல்லாஹ் பேசுகிறான் என்று நபி(ஸல்) அவர்களே சிறப்பித்துக் கூறியிருக்கிறார்கள். இப்படிப் பல சிறப்புகளுக்குரிய உமர்(ரழி) அவர்களை, நபி(ஸல்) அவர்கள் மரணித்த அடுத்த வினாடியே ஒரு மாபெரும் தவற்றைச் செய்ய வைத்து, அவர்கள் செய்தது மாபெரும் தவறு என்பதை அபூபக்கர்(ரழி) அவர்கள், **'யார் முஹம்மதை வணங்கிக் கொண்டிருந்தார்களோ அவர்கள் அறிந்து கொள்ளட்டும், அந்த முஹம்மது இறந்துவிட்டார்'** என்று சொல்ல வைத்து, எத்தனைப் பெரிய மனிதராக இருந்தாலும் தவறு செய்யும் வாய்ப்பே மிகுதி. அப்படிப்பட்ட தவறுகளைவிட்டும் காத்துக்கொள்ள குர்ஆனும், ஹதீஸுமே ஆதாரம் என்ற மாபெரும் உண்மையை உலகிற்கு அல்லாஹ் உணர்த்துகிறான். உமர்(ரழி) அவர்கள் கூற்று தவறு என்று அபூபக்கர்(ரழி) இரண்டு குர்ஆன் வசனங்களை ஓதிக்காட்டியே நிலை நாட்டுகிறார்கள். 31:144, 39:30 உமர்(ரழி) அவர்களும் குர்ஆன் வசனங்களைக் கேட்ட மாத்திரத்தில் தம் தவற்றை உணர்ந்து, அதை விட்டும் வெளியாகிவிடு கிறார்கள். தாங்கள் கூறும் அந்தப் பெரியார்களை நான் இழிவாகக் கருதுவதாக எண்ண வேண்டாம் அவர்கள் செயல்களுக்குரிய நல்ல கூலி அல்லாஹ்விடம் உண்டு. அவர்களைப் பற்றி குர்ஆனும், ஹதீஸும் தெளிவாகச் சொல்கின்றன. ஆனால் அவர்களைப்பற்றி என்னிடம் கேட்கப்படமாட்டாது என்பதைக் குர்ஆன் தெளிவாக கூறிக்கொண்டிருக்கிறது. ஆக நான் பெற்ற படிப்பினை, முன் சென்ற அறிஞர்களின் செயலை ஆதாரமாக வைத்த மார்க்கம் இல்லை. மார்க்கம் தெளிவாகக் குர்ஆனைக் கொண்டும், ஹதீஸைக் கொண்டும் நிலைநாட்டப்பட்டவை மட்டுமே. அவற்றிற்கு மாற்றமாக எத்தனைப் பெரிய மனிதருடைய செயல் இருந்தாலும், அந்தப் பெரிய மனிதர்

செய்தார் சொன்னார் என்பதற்காக நாம் அதை எடுத்து நடக்க, இஸ்லாம் நம்மை அனுமதிக்கவில்லை என்பதே யாகும். இந்தச் சிந்தனைகளே நீங்கள் குறிப்பிட்டிருந்த முன் சென்ற அறிஞர்களைக் குருட்டுத் தனமாகப் பின்பற்றுவதை விட்டு என்னைத் தடுத்துவிட்டன. இதில் தவறு இருந்தால் தக்க ஆதாரங்களுடன் அறியத் தாருங்கள் நான் மிகவும் நன்றி யுடையவனாக இருப்பேன்.

“இன்று பொதுவாக மக்கள் தீனையும், மார்க்கத் தையும் பரக்கத்துக்காக என்று ஒதுக்கிவைத்து விட்டு, வாழ்க்கை நடைமுறையை உலகாதாயம், உலக இன்பம் இரண்டையும் அடிப்படையாக்கிக் கொண்டு மனம் போன போக்கில் வாழ்ந்து கொண்டு, அல்லாஹ்வால் கடமையாக் கப்பட்ட தொழுகையைக் கூடத் தங்கள் ஈமானின் பல ஹீனத்தால் பொதுவாக விட்டுக் கொண்டிருக்கும்போது, நம் ஈமானையும், அவர்களது ஈமானையும் பலப்படுத்து வதையே நம் குறிக்கோளாக்கிச் செயல்பட வேண்டும், அத்துடன் ஈமானின் அடிப்படையில் சிறு சிறு பிணக்கு, கருத்து வேறுபாடுகளை மறந்து களைந்து அவர்களை ஒன்று சேர்க்க முயல வேண்டும். இதுவே அறிவு படைத் தவர்களின் கடமையாகும். நாம் கூறும் எந்தச் செய்தியும் உம்மத்தை இணைப்பதாக இருக்க வேண்டுமே யன்றிப் பிரிப்பதா இருக்கக் கூடாது” என்று தங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தீர்கள். மிகச்சிறந்த அறிவுரை. ஏற்றுக் கொள்கிறேன். இதற்கு நபி(ஸல்) அவர்கள் காட்டிய வழி என்ன என்று ஆராய்ந்தேன். 1400 ஆண்டுகளுக்கு முன் இப்ராஹீம்(அலை) அவர்களின் உம்மத்தாகிய குறைஷ்கள், இப்ராஹீம்(அலை) அவர்கள் போதித்த போதனைகளை விட்டு விலகி மனம்போன போக்கில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். நபி(ஸல்) அவர்கள் அந்த மக்களை ஏகத்துவத்தின் அடிப்படையிலேயே ஒன்று படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்கள். சமுதாய ஒற்றுமை யைக் குலைப்பதாகவும், தகப்பனுக்கும் மகனுக்கும், கணவனுக்கும், மனைவிக்கும், அண்ணனுக்கும், தம்பிக் கும் குடும்பத்திற்கும் இடையே பகைமை உணர்வை ஏற்படுத்துவதாக நபி(ஸல்) அவர்கள் மீது குறைஷ்கள் பெருங் குற்றத்தைச் சுமத்தினர். வெளிப்படையாகப் பார்ப் பவர்களுக்குக் குறைஷ்களின் குற்றச்சாட்டு நியாயமாகவே

பட்டது. அதனால் நபி(ஸல்) அவர்கள் தம் போதனையிலிருந்து பின் வாங்கினார்களா? குறைஷ்கள் குற்றம் சாட்டியது போல் பிணக்குகளும் பிரிவுகளும் ஏற்படத்தான் செய்தன. நபி(ஸல்) அவர்களின் இரண்டு பெண் மக்களே கணவன்மார்களால் துரத்தப்பட்டுத் தாய் வீடு வந்து சேர்ந்தனர். இதேபோல் பல நிகழ்ச்சிகள். இவற்றிற்கு இடையில் நபி(ஸல்) அவர்கள் தமது போதனையை ஏன் தொடர்ந்தார்கள்?

ஆம்! உண்மை நிலை நாட்டப்பட, உண்மையான சமூக ஒற்றுமை ஏற்பட, இப்படிப்பட்ட தியாகங்கள் செய்யப்பட்டே ஆக வேண்டும். இவை இல்லாமல் சமூக சீர்திருத்தம் இல்லை. இருந்தால் நபி(ஸல்) அந்த முறையில் செய்து காட்டி இருப்பார்கள். உடலுக்குள் உள்ள கேன்ஸர் நோயைக் குணப்படுத்த அறுவை சிகிச்சை செய்தே ஆகவேண்டும். உடலைக் கிழிப்பதா? இது நியாயமா? என்று நியாயம் பேசினால், நோயாளி இறந்தாக வேண்டும். எதைச் செய்வது? எதை விடுவது?

நீங்கள் குறிப்பிட்டுள்ளதுபோல், தீன் மக்களுக்கு பரக்கத்துக்காக என்று எதனால் ஆனது? ஆணிவேர் என்ன? மக்கள் தீனைப் பற்றிச் சிந்திக்கும் உரிமையைப் பறித்ததுதான் காரணமாகும். மக்கள் சுயமாகச் சிந்திக்காமல், யாரோ எழுதி வைத்துள்ளவற்றைக் குருட்டுத் தனமாக நம்ப வேண்டும் (தக்லீத்) என்று சட்டம் வகுத்ததே யாகும்.

உலகக் காரியங்களில் சிந்திக்கிறார்கள் ஆராய்கிறார்கள் முயற்சி செய்கிறார்கள், அவற்றை நிறைவாக அடைகிறார்கள். எந்த அளவு என்றால், தாங்களும் தங்கள் குடும்பமும், சுற்றத்தார் அனைவரும் தாராளமாக அனுபவித்து விட்டு, நாங்கள்தான் ஆலிம்கள், அறிஞர்கள் ஆற்றல் மிக்கவர்கள் என்று நெஞ்சுயர்த்திப் பேசுபவர்களின் தேவைகளை ஜாஹில்கள் என்று வர்ணிக்கப்படுகின்ற இவர்களே நிறைவேற்றிக் கொடுக்கிறார்கள்.

தங்களை ஆலிம்கள் என்று மார்தட்டிக் கொள்பவர்களின் கை கீழேயும், ஜாஹில்கள் என்று வர்ணிக்கப்படுகின்றவர்களின் கை மேலேயும் இருக்கின்ற வியத்தகு நிலையைப் பார்த்தீர்களா? அற்பமான உலகத் தேவைகளைத் தங்களுக்காகத் தங்கள் முயற்சியால் நிறைவு செய்து கொள்ளும் ஆற்றல் அற்றவர்களா, பிறர் தயவை

எதிர்பார்த்து நிற்பவர்களா, மக்களின் மறு உலகத் தேவை களை நிறைவு செய்து கொடுக்கப் போகிறார்கள். கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவனா வானமேறி சாதிக்கப் போகிறான்? தக்லீதின் பேரால் நடத்தப்படும் இந்தக் கொடுமையைத் தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள்.

**உலகத் தேவைகளைத் தங்களுக்கும், ஆலிம்களுக் குமாக முயற்சி செய்து திரட்டும் பொதுமக்களை, தக்லீதின் பேரால் குருட்டு நம்பிக்கையோடு செயல்படுவதை விட்டு, அவர்களைக் குர்ஆன், ஹதீஸை விளங்கிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடுத்தினால் எந்த அளவு ஆற்றல் மிக்கவர்களாக ஆவார்கள் என்பதைச் சிந்திக்கக் கடமைப் பட்டுள்ளோம்.**

தப்லீஃக் பணியில் ஈடுபட்டு வரும் பொதுமக்களின் அறிவுக் கூர்மையைச் சிந்தித்துப் பாருங்கள். கட்டுக் கதைகளோடு கூடிய தஃலீம் தொகுப்புக்களைப் படிப்பது கொண்டே இந்த அளவு ஆற்றல் பெறுகிறார்கள் என்றால், அவர்களைக் குர்ஆனையும், ஹதீஸையும் படிக்க ஆர்வப் படுத்தினால் எந்த அளவு ஆற்றல் பெறுவார்கள் என்பது தப்லீஃக் பணியில் தற்போது தீவிரமாக ஈடுபட்டிருக்கும் தங்களுக்கு விளங்க முடியாத தன்று.

**குர்ஆன் : இது அல்லாஹ்வின் பேச்சாகும். ஹதீஸ் : இது நபி(ஸல்) அவர்கள் பேச்சாகும். அல்லாஹ் வின் பேச்சை விளங்கிக் கொள்ள முடியாது. அதை விளக்க ஒருவர் தேவை என்றால், அது உண்மையானால், உண்மையில் அந்த ஒருவர் அல்லாஹ்வை விட ஆற்றல் மிக்கவர் என்பதுதான் பொருளாகும். அதேபோல், நபி(ஸல்) அவர்களின் பேச்சை விளங்கிக் கொள்ள முடியாது. அதை விளக்க ஒருவர் தேவை என்றால், அது உண்மை யானால், உண்மையில் அந்த ஒருவர் நபி(ஸல்) அவர் களைவிட ஆற்றல் மிக்கவர் என்பதுதான் பொருளாகும். இந்தச் சிந்தனை ஒரு முஸ்லிமின் ஈமானைப் பாக்கி வைக்குமா? என்பதைச் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.**

நபி(ஸல்) அவர்கள், அன்று ஏற்பட்ட பிணக்கு களையும், குடும்பப் பிரிவினைகளையும், பிளவுகளையும் பொருட்படுத்தாமல் 23 ஆண்டுகளாகப் பாடுபட்டுச் சொல் லடி கல்லடி பட்டு எந்தத் தௌஹீதை நிலைநாட்டினார்

களோ, அந்தத் தௌஹீத், இந்தத் தக்லீத் தத்துவத்தால், இன்று சின்னாபின்னப் படுத்தப்பட்டுள்ளது. இன்று மக்களுக்கு இடையே காணப்படும் அனைத்து ஷிர்க், பித்அத்களுக்கும், அறியாது கண்மூடித்தனமாகச் செய்ய வைக்கும் இந்தத் தக்லீதே காரணமாகும்.

தக்லீதை ஷிர்க்காகப் பெரும்பாலோர் நினைப்பதில்லை. காரணம் பழக்கமே. பரேல்வி கொள்கைப்படிச் சிலைகளைப் பூஜிப்பது தான் ஷிர்க், கபுருகளைப் பூஜிப்பது ஷிர்க் அன்று. தேவ்பந்த் கொள்கைப்படி சிலைகளை, கபுருகளை பூஜிப்பது ஷிர்க். ஆனால் இமாம்களைப் பூஜிப்பது ஷிர்க் அல்ல. நாங்கள் இமாம்களைப் பூஜிக்கவில்லையே என்று தேவ்பந்திகள் கேட்கலாம், அன்று நபி(ஸல்) அவர்களிடம் கிறிஸ்துவர்கள் கேட்டது போல். அதாவது **“இவர்கள் அல்லாஹ்வையன்றித் தங்கள் பாதிரிகளையும், துறவிகளையும் மர்யமுடைய மகன் ஈசாவையும் ரப்புகளாக ஆக்கிக் கொண்டனர்.”** (9:31) என்ற இறை வசனம் இறக்கப்பட்டவுடன் கிறிஸ்தவர்கள் நாங்கள் பாதிரிகளையும், துறவிகளையும் வணங்கவில்லையே என்று கேட்டனர். அதற்கு நபி(ஸல்) அவர்கள், உங்கள் நெறி நூலில் ஒன்று ஹராம் என்று சொல்லப்பட்டிருக்க உங்கள் பாதிரிகளும், துறவிகளும் ஹலால் என்று சொன்னால், நீங்கள் எதைச் செய்வீர்கள்? என்று கேட்டார்கள். **“எங்கள் பாதிரிகள், துறவிகள் சொல்லியபடி செயல் படுவோம்”** என்று பதில் அளித்தார்கள். இதுதான் அவர்களை வணங்குவது (பூஜிப்பது) என்று நபி(ஸல்) அவர்கள் விளக்கம் தந்தனர். இந்த அடிப்படையில் தக்லீதின் பேரால் குர்ஆன், ஹதீஸுக்கு முரணாக எத்தனைக் காரியங்களை நாம் இமாம்கள் சொன்னதாகச் செய்து கொண்டிருக்கிறோம். உதாரணமாக இறந்தவர்களின் பொருட்டால் கேட்பது ஹராம் என்று நான்கு இமாம்களும் சொல்லியிருக்கும் நிலையிலும், நாம் இன்று காணும் மார்க்கப் பெரியார்களில் பலர், இயல்பாகது இறந்தவர்களைப் பொருட்டாக வைத்து வஸீலா தேடி துஆ செய்வதைப் பார்க் கிறோம். இது இமாம்களைப் பூஜிப்பதா? இல்லையா? சிந்திக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

நான் முன்னே சொன்னதுபோல் நெடும் பழக்கமே தக்லீதின் கொடுமையை நம்மால் உணர முடியாமல் தடுக்

கின்றது. சாலையில் திடீரென ஒரு விபத்து. ஒருவனது மண்டை உடைந்து குருதி வழிந்தோடுகின்றது. பார்ப்ப வர்கள் அதிர்ச்சிக் குள்ளாகிறார்கள். பலர் படுகாயப்பட்டுக் கிடந்தால், பார்ப்போர் அதிர்ச்சியும் மிகுதியாகின்றது. ஆனால் மருத்துவ விடுதியில் விபத்துக்குள்ளானவர்களுக் குச் சிகிச்சை அளிக்கும் பகுதியில் வேலை செய்பவர்கள், இந்தக் கோரக்காட்சிகளைப் பார்த்து, எந்தச் சலனமும் அடைய மாட்டார்கள். காரணம், அன்றாடம் இப்படிப்பட்ட காட்சிகளைப் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். அவர் கள் சலன மடையாததால், விபத்து சாதாரணமானது என்று சொல்ல முடியுமா?

இதே போல்தான் இன்று பரேல்விகளின் நிலையும், தேவ்பந்திகளின் நிலையும் இருக்கிறது. கபுரு பூஜையில் மூழ்கிக் கிடப்பதால், பரேல்விகளுக்கு அது ஷிர்க்காகத் தெரியவில்லை. இமாம்களது பூஜையில் மூழ்கிக் கிடப்ப தால் தேவ்பந்திகளுக்கு அது ஷிர்க்காகத் தெரியவில்லை. ஆனால் சிலைகள் பூஜை, கபுருகள் பூஜை, இமாம்கள் பூஜை இவை அனைத்தும் தரத்தில் ஒத்த ஷிர்க்குகளே. சிலைக்குரியவர்கள் எப்படி மனிதர்களோ, அதே போல் கபுருக்குரியவர்களும் மனிதர்களே, இமாம்களும் மனிதர்களே, மக்கள் இமாம்களின் பேரால் சொல்லப்பட் டிருப்பவற்றைக் கண்ணை மூடிக்கொண்டு (தக்லீத்) பின்பற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு, இமாம்கள் என்ன தவறு செய்திருப்பார்களா? அவர்கள் சாதாரண மனிதர்களா? அவர்களைப்போல் ஆக முடியுமா? என்று அவர்களுக்குத் இறைத் தன்மைகளைச் சூட்டுவதால் எவ்வளவு பெரிய விபரீதங்களெல்லாம் இந்த உம்மத்தில் ஏற்பட்டுள்ளன என்பதைப் பொறுமையாகச் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். இமாம்களும் மனிதர்களே. ஆக மனித வழிபாடு, மனித ஸ்தோத்திரம் இஸ்லாத்தில் இல்லை என்பதை நாம் விளங்கிக்கொண்டால், எத்தனைப் பெரிய மாற்றத்தை அது உம்மத்தில் ஏற்படுத்தும் என்பதையும் சிந்தியுங்கள்.

நபி(ஸல்) அவர்கள் தன் தொடக்க 13 ஆண்டு களாக மக்களுக்குப் போதித்த தௌஹீதில் 4 அம்சங்கள் இருக்கின்றனக தௌஹீதுல் உலூஹிய்யா, தௌஹீதுல் ருபூபிய்யா, தௌஹீதுல் அஸ்மாயிஹிவ சிபாத்திஹீ, தௌஹீதுல் இத்திபா. இந்த நான்கு அம்சங்களிலும், 3 அம்சங்களிலும் தக்லீதால் ஷிர்க் ஏற்படுகின்றது.

10:18, 39:3 இறைக் கட்டளைகளுக்கு முரணாக வலிமார்களை வஸீலாவாக ஆக்குவது, தௌஹீதுல் உலூஹிய்யாவில் ஷிர்க்கா? இல்லையா? சிந்திக்க வேண்டுகிறேன்.

கட்டளையிடும் அதிகாரம் ரப்புவுக்கு மட்டுமே சொந் தம் நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளதை நாம் செய்கிறோம் என்றால் அல்லாஹ் கட்டளையிட்டு நபி(ஸல்) அவர்கள் கட்டளை யிடுகிறார்கள் என்றுதான் ஏற்று நடக் கிறோம். அல்லாஹ்வும், நபியும் கட்டளை யிடாததை நாம் கட்டளையாக ஏற்று நடப்பதாக இருந்தால், கட் டளை யிடுவதற்கு இன்னொரு ரப்பு இருப்பதாகவே எண்ணு கிறோம். இது தௌஹீதுல் ருபூபிய்யாவில் ஷிர்க்கா? இல்லையா? என்பது நம் சிந்தனைக் குரியது.

தவறே செய்யாத அந்தத் தனித்தன்மை அல்லாஹ் வுக்கே சொந்தம். நபி(ஸல்) அவர்கள் நுபுத்துவ காலத் தில் அல்லாஹ்வின் கண்காணிப்பில் இருந்தார்கள் 52:48 தவறு ஏற்படும் இடங்களில் அல்லாஹ் வஹீ மூலமாகத் திருத்தினான். ஆனால் இமாம்களென்ன தப்பா கவா சொல்லி இருப்பார்கள்? அவர்கள் தவறு செய்தி ருக்கமுடியுமா? என்று வினா எழுப்பினால், அந்த இமாம் களையும் தவறே செய்யாத அல்லாஹ்வுக்குச் சொந்த மான தனித்தன்மைக்கு உயர்த்தி விடுகிறோம். இது "**தௌஹீதுல் அஸ்மாயிஹீ வசிபாத்திஹீ**"யில் ஷிர்க்கா? இல்லையா? என்பதைச் சிந்திக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

அடுத்து அல்லாஹ் விதித்து நபி(ஸல்) அவர்களைப் பின்பற்றுகிறோம். அல்லாஹ் விதிக்காத நிலையில் இமாம் களைப் பின்பற்றுவதாக அகீதா கொண்டால், இது தௌஹீதுல் இத்திபாவில் ஷிர்க்கா? இல்லையா? சிந்திக் கக் கடமைப்பட்டுள்ளோம். ஆக ஷிர்க்குகளில் மிகவும் கொடூரமான ஷிர்க், இந்தத் தக்லீதுதான் என்பதற்கு இன்னும் பல ஆதாரங்களைத் தரமுடியும். இந்த உம்மத்தில் தக்லீத் ஏற்படாதவரை, இமாம் பரஸ்தி (வணக்கம்) ஏற்படவில்லை. தஸவ்வுப் ஏற்படாத வரை பீர் பரஸ்தி (வணக்கம்) ஏற்படவில்லை. பீர் பரஸ்தி ஏற்படாத வரை கபர் பரஸ்தி ஏற்படவில்லை. இப்போது சிந்தித்துப் பாருங்கள் இந்தத் தக்லீத் ஷிர்க்குகளின் ஆணிவேரா?

இல்லையா? இந்தத் தக்லீதை ஒழிக்காத நிலையில், உம்மத்தில் வேரூன்றிவிட்ட ஷிர்க், பித்அத்துகளை ஒழிக்க முடியுமா? இந்தத் தக்லீதைச் சாதாரண ஒரு சிறிய கருத்து வேறுபாடாகக் கருத முடியுமா?

தக்லீதின் நச்சுத்தன்மை கிறிஸ்தவர்களின் திரியேகத்துவத்தை விடக் கொடியதா? இல்லையா? தயவு செய்து சிறிது நிதானமாகவே சிந்திக்கக் கடமைப்பட் டிருக்கிறோம்.

தக்லீதை விட்டு ஷிர்க், பித்அத்தைப் பற்றிப் பேசுவதில் பொருள் என்ன இருக்க முடியும்? உம்மத்தின் ஈமானில் பலஹீனம் உள்ளது என்று நீங்கள் குறிப்பிட் டிருப்பது உண்மையே. ஈமானைப் பலப்படுத்த, முதன் முதலில் நாம் செய்யவேண்டிய வேலை தௌஹீதை நிலைநாட்டுவது. தௌஹீதை நிலைநாட்ட முதலில் நாம் களைய வேண்டியது இந்தத் தக்லீதைத்தான்.

**“நாம் செய்யும் காரியம் உம்மத்தை இணைப்பதாக இருக்க வேண்டுமேயன்றிப் பிரிப்பதாக இருக்கக் கூடாது”** என்று குறிப்பிட்டிருந்தீர்கள். மிக உண்மையான பேச்சு. ஐயமே இல்லை. ஆனால் நாமெல்லாம் முஸ்லிம்கள் நபி(ஸல்) அவர்களை மட்டுமே பின்பற்றுகிறோம் என்று உம்மத்தை ஒரே மேடைக்கு அழைப்பதன் வழி உம்மத்தை இணைக்க முடியுமா? ஒற்றுமை ஏற்படுத்த முடியுமா? அல்லது நாமெல்லாம் ஹனஃபி, ஷாஃபி, மாலிகி, ஹன்பலி என்று நான்கு பிரிவினைகளைச் சொல்லி நான்கு மேடைகளில் நின்று கொண்டு, நம்மிடையே இணைப்பு ஏற்படவேண்டும், ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்று முழங்குவதால், உண்மையான இணைப்பு ஏற்படுமா? ஒற்றுமை ஏற்படுமா? நாம் ஆழமாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய ஒரு கட்டாயமான சூழ்நிலையில் இருக்கிறோம். நாமெல்லாம் முஸ்லிம்கள். அல்லாஹ்(ஜல்) கொடுத்த பெயர். அல்லாஹ் சூட்டிய பெயரால் ஒற்றுமை உண்டாக்க முடியுமே அல்லாது மனிதர்களால் கற்பனையாகச் சூட்டப்பட்ட பெயர்களால் உறுதியாக ஒற்றுமை உண்டாக்க முடியாது உண்டாக்க முடியவே முடியாது.

**“விவாதங்களால் நல்ல முடிவை இந்தக் காலத்தில் எதிர்பார்க்க முடிவதில்லை”** என்று குறிப்பிட்டிருந்தீர்கள்.

இதற்குக் காரணம் இன்றைய விவாதங்கள் தனது திறமையை வெளிக்காட்டவும் எதிர்த் தரப்பாரைவிட, நாம் ஆற்றல் மிக்கவர்கள் என்ற இறுமாப்பின் அடிப்படையிலும் நடத்தப்படுகின்றன. ஓர் உண்மையான முஸ்லிமிடம் இவை இருக்க முடியாது. உண்மையான முஸ்லிம்கள் உட்கார்ந்து விவாதம் செய்யும்போது, தங்கள் கருத்து நிலைநாட்டப் பட வேண்டும் என்ற எண்ணத்தை விட, அல்லாஹ்(ஜல்) கொடுத்த மார்க்கம் நிலை நாட்டப்பட வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி இருக்கும். இந்த அடிப்படையில் நடக்கும் விவாதங்களில் பயன் ஏற்படும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த அடிப்படையில் நம் விவாதங்களை அமைத்துக்கொள்ள முயற்சிகள் செய்வோமாக இன்ஷா அல்லாஹ்.

இறுதியாக (1) கணவன் காணாமல் போனால் மனைவி என்ன செய்வது? (2) பால் குடி குழந்தை மூத்திரம் பட்டுவிட்டால் எப்படி? ஹதீஸின் அடிப்படையில் பதில் எழுதக் கோருகிறேன் என்று கேட்டிருந்தீர்கள்.

இந்த இரண்டு கேள்விகளும், எந்த நோக்கத்தோடு கேட்கப்பட்டிருக்கின்றன? குர்ஆனிலும், ஹதீஸிலும் காணமுடியாத செய்திகளில் எப்படி முடிவு செய்து கொள்வது என்ற நோக்கத்தோடு கேட்கப்பட்டிருந்தால், எங்கள் வெளியீடுகளை மீண்டும் ஆத்திரம் இல்லாமலும், அனுதாபம் இல்லாமலும் நடுநிலையாக நிதானமாகப் பார்வையிடும்படி அன்போடு கேட்டுக் கொள்கிறேன். குர்ஆன், ஹதீஸில் காணமுடியாத ஒரு செய்தியில், எந்த இமாம் எந்த முடிவைச் செய்திருந்தாலும், குர்ஆன், ஹதீஸுக்கு மாற்றமில்லாத நிலையில் அது இருந்தால் அந்த முடிவைப்பற்றி நாங்கள் மறுப்பைக் கிளப்பியதே இல்லை. ஆக இந்தக் கேள்விகளுக்கே இடமில்லை.

குர்ஆன், ஹதீஸில் போய் மோதும், முரண்படும் செய்திகளை மட்டுமே நாங்கள் மறுக்கிறோம் குர்ஆன், ஹதீஸுக்கு முதன்மை கொடுக்கிறோம்.

உதாரணமாகக் கணவன் காணாமல் போனால் மனைவி என்ன செய்வது? என்பதில் ஹனஃபி பிக்ஹின் படி 90 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்று கூறப் படுகின்றது. ஆம் கூறப்படுகின்றது. கூறப்படும் இந்த முடிவுக **"அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கிறீர்கள்."**

*அல்குர்ஆன் 2:187*

பெண்களின் நிர்வாகிகளாக ஆண்களே இருக் கின்றனர்... (ஆண்களாகிய) அவர்கள் தங்கள் பொருள் களைப் பெண்களுக்காகச் செலவு செய்கின்றனர் (4:34). என்ற இறைவசனங்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள். 90 ஆண்டுகள் காத்திருந்தால் அந்தப் பெண்ணுக்கு அதன் பின், ஒரு கணவர் தேவையா? தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். நடுநிலையோடு ஆராயும்போது சிக்கல் எளிதாகி விடுகின்றது.

இரண்டாவது கேள்வி. இதன் தொடர்பாக ஹதீஸ் இல்லை என்றால், இந்தக் கேள்வி எழ நியாயமே இல்லை. பொதுவாக மூத்திரத்திற்கு எது சட்டமோ, அந்தச் சட் டமே குழந்தையின் மூத்திரத்திற்கும் அமைந்துவிடும். இது விஷயமாக வேறு முடிவு செய்ய, எந்த இமாமும் அதிகாரம் பெறமாட்டார். ஆனால் குழந்தைகள் மூத்திரம் விஷயமாகத் தெளிவாக ஹதீஸ்கள் வந்திருக்கின்றன. இரண்டு ஹதீஸ்களைத் தருகின்றேன்.

**(1) (கடின) உணவு உண்ணாத (பால்குடிக்கும்) ஒரு சிறு ஆண் குழந்தையை நான் நபி(ஸல்) அவர் களிடம் கொண்டு சென்றேன். அப்போது அவர்கள் அதனைத் தம் மடிமீது அமர வைத்துக் கொண்டனர். ஆனால் அது அவர்களின் ஆடைகளின் மீது சிறுநீர் பெய்து விட்டது. அப்போது நபி(ஸல்) அவர்கள் தண்ணீர் கொண்டு வரச் செய்து அதன்மீது தெளித்து விட்டனர். அதனைக் கழுவவில்லை.**

*அறிவிப்பவர் : முஹ்யின் உடைய மகளார் உம்முகைஸ்(ரழி),*

*நூல் : புகாரீ, முஸ்லிம், முஅத்தா, அபூதாவூத், திர்மிதீ, நஸயீ*

(2) நபி(ஸல்) அவர்களின் மடியில் அமர்ந்திருந்த அலீ(ரழி) அவர்கள் மகனார் ஹுஸைன்(ரழி) அவர்கள் நபி(ஸல்) அவர்களின் ஆடையில் சிறுநீர் பெய்து விட்டனர். அப்போது நான், **"நபியே தங்கள் மேலாடையை அணிந்துகொண்டு கீழாடையை என்னிடம் தாருங்கள். நான் அதைத் துவைத்துத் தருகிறேன்"**, என்று கூறினேன். **"பெண் குழந்தை சிறுநீர் பெய்தால்தான் ஆடைகளைத் துவைக்கவேண்டும். ஆண் குழந்தை சிறுநீர் பெய்தால், தண்ணீர் தெளித்தால் போதுமானதாகும்''** என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : பவர்லுபாது பின்து ஹாரிஸ்(ரழி), நூல் : அபூதாவூது*

ஹதீஸ் தெளிவாக இருக்கும் நிலையில் யூகத்திற்கு இடமே இல்லை. இங்கு நாம் முக்கியமான ஒரு கருத்தைக் கவனிக்க வேண்டும். மஆத் இப்னு ஜபால்(ரழி) அவர்களை, யமன் நாட்டிற்குக் கவர்னராக (ஆளுநராக) அனுப்பி வைக்கும்போது 'மஆதே உம்மிடம் ஒரு வழக்கு வந்தால், அதை எப்படித் தீர்ப்பீர்? என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். வழக்கு என்ற நிலையில் குர்ஆன், ஹதீஸில் காணமுடியாவிட்டால், யூகத்திற்கு அனுமதி உண்டே அல்லாமல், குர்ஆன், ஹதீஸில் உள்ள விஷயத்திற்கோ, மார்க்கத்தில் புதிதாக ஒன்றைச் சேர்ப்பதற்கோ யூகம் இல்லை என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இன்று இஸ்லாத்தில் பெரும் குழப்பங்கள் ஏற்படுவதற்கு இந்த தக்லீதும், இஜ்மா, கியாஸ் பெயர்களால் குர்ஆன், ஹதீஸுக்கு மாற்றமான விஷயங்களும், மார்க்கத்தில் புதிய விஷயங்களும் புகுத்தப்பட்டதனாலேயே யாகும். இவற்றைக் களைந்தால் அல்லாமல் இஸ்லாத்தில் மறுமலர்ச்சியைப் பார்க்கமுடியாது.

ஆக இந்தச் சிந்தனைகள்தான் என்னைத் தக்லீத், தஸவ்வுஃப் இவற்றை விட்டுத் தெளபாச் செய்ய வைத்ததோடு, நான் பெற்ற இன்பத்தை இந்த வையகமும் பெற வேண்டும் என்ற அளவிலா ஆசையோடு மக்களுக்கு முன், என் இந்தச் சிந்தனைகளை எடுத்து வைத்து முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறேன். தயவு செய்து

எனது இந்தக் கருத்துக்களை நிதானமாக, நன்கு ஆராய்ந்து இவை குர்ஆன், ஹதீஸுக்கு மாற்றமாக, இருந்தால் தெளிவான ஆதாரங்களுடன் அறியத் தாருங் கள். அது உண்மையானால் ஏற்று நடக்கச் சித்தமாக இருக்கிறேன்.

எல்லாம் வல்ல அல்லாஹ்(ஜல்) உண்மை மார்க் கத்தை உள்ளது உள்ளபடி நாம் விளங்கிச் செயல்படுத்து வதற்கும், அந்த உண்மை மார்க்கத்தை மட்டும் மக்களுக் குப் போதிப்பதற்கும், அதனால் ஏற்படும் அனைத்துத் துன்பங்களையும் அழகிய பொறுமையுடன் சகித்துக் கொள்வதற்கும் அருள் புரிவானாக. ஆமீன்.

வஸ்ஸலாம்.

*இங்ஙனம்*

**அபூ அப்தில்லாஹ்**